# தமிழ் நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24357580.*

**வழக்கு எண். 7440 / விசாரணை / 2009**

**<u>விசாரணை நடைபெற்ற நாள் 23.09.09.</u>**

**முன்னிலை :** திரு.தி.சீனிவாசன். எம்.எஸ்சி.,
மாநில தகவல் ஆணையர்

**மனுதாரர் :** திரு. என். தேவராஜ்,
த/பெ. எம். நம்மாழ்வார்,
நெ.3 /150, சிறுங்குன்றம் சாலை,
அனுமந்தபுரம் அஞ்சல்,
செங்கற்பட்டு வட்டம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

**பொது அதிகார அமைப்பு :** பொதுத் தகவல் அலுவலர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
செங்கல்பட்டு வட்டம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

-------

மனுதாரர் திரு. என். தேவராஜ் மற்றும் திரு. ஜோன்ஸ், தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர், செங்கல்பட்டு வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம் இவ்வாணையத்தில் இன்று (23.09.09) நடைபெற்ற விசாரணைக்கு வந்திருந்தனர்.

மனுதாரர் 28.03.08 அன்று 8 இனங்களில் பட்டா மாற்றம் செய்தது குறித்து தகவல் கேட்டு விண்ணப்பித்துள்ளார். தகவல் கிடைக்காததால் 29.04.08 அன்று மேல்முறையீடு செய்துள்ளார். எந்தவித தகவலும் கிடைக்காததால் 26.03.09 அன்று இவ்வாணையத்திற்கு மேல்முறையீடு செய்த மனு இன்று (23.09.09) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையில் பொதுத் தகவல் அலுவலர் 05.03.09 அன்று தகவல்கள் தரப்பட்டதாக தெரிவித்தார். மனுதாரர் கேட்டுள்ள தகவல்கள் தரப்படவில்லை என்று தெரிவித்தார். மனுதாரர் குறிப்பிட்டு 8 இனங்களில் தகவல் கேட்டு இருந்தும், மனுதாரருக்கு குறிப்பிட்டு 8 இனங்களுக்கும் தகவல் தரப்படாமல் பொதுவாக மனுதாரருக்கு பட்டா வழங்க கோரியது குறித்து ஒரு சில விவரங்கள் தரப்பட்டுள்ளது தெரிய வருகிறது. மனுதாரர் கேட்ட தகவல்கள் குறித்தும், மனுதாரருக்கு கொடுக்கப்பட்ட தகவல்கள் குறித்தும் முழுவதுமாக விசாரிக்கப்பட்டதில் இனம் 1, 4 மற்றும் 5–க்கு தகவல் தரப்பட்டுள்ளதாகவும், இனம் 8–ல் மனுதாரர் பட்டா மாற்றம் செய்து தருமாறு கேட்டுள்ளது கோரிக்கையாகவும் எடுத்துக்கொள்ளப்பட்டது. வினா எண் 2, 3, 6 மற்றும் 7–க்கு நேரிடையாக தகவல் தரப்படவில்லை என்று இவ்வாணையம் முடிவு செய்து கீழ்க்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

மனுதாரருக்கு குறிப்பிட்டு இனம் 2, 3, 6 மற்றும் 7–க்கு உரிய நேரிடையான தகவலை இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஒரு வாரத்திற்குள் இலவசமாக அளித்து அதன் விவரத்தை இவ்வாணையத்திற்குத் தெரிவிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையிடப்படுகிறது.

ஒப்புதல் பெறப்பட்ட நாள் 29.09.09
ஆணையத்தின் ஆணைப்படி

தமிழ்நாடு தகவல் ஆணையம்

( சு. மோகன தாஸ் )
உதவி பதிவாளர்

<u>வழக்கு எண். 7440 /09</u>

பெறுநர்
பொதுத் தகவல் அலுவலர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
செங்கல்பட்டு வட்டம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

திரு. என். தேவராஜ்,
த/பெ. எம். நம்மாழ்வார்,
நெ.3 /150, சிறுங்குன்றம் சாலை,
அனுமந்தபுரம் அஞ்சல்,
செங்கற்பட்டு வட்டம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.